முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான் எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

**சோபகிருது வருடம் தை மாதம் 28 திகதி முதல்**
**சோபகிருது வருடம் மாசி மாதம் 06 திகதி வரை**
**(11.02.2024 ஞாயிறு முதல் 18.02.2024 ஞாயிறு வரை)**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. மாதவசியே அரங்கா வாழ்க
   மரணமிலாப் பெருவாழ்வுதனை
   பூதலத்தில் மக்களெல்லாம் அடைய
   புண்ணிய வழிகாட்டும் அரங்கனே
2. அரங்கனே உன்அவதாரம் மெச்சி
   அகத்திய மகரிஷியும் வாரஆசி
   அரங்கஞானி நீகேட்க உரைப்பேன்
   அகிலமதில் இந்தியா தமிழகம் தன்னில்
3. தன்னிலே சோபகிருது கலைதிங்கள்
   தக்க எழுநான்கு திகதிமேல் சால்திங்கள்
   நன்னயமாய் இருமூன்று திகதிவரை
   நடக்கும் நிகழ்வாக வருங்கால பலன்குறித்த
4. பலன்குறித்த ஆசிதனை உரைப்பேன்
   பண்பான ஞானவான் படைகள்
   சலனமின்றி உலகெல்லாம் நிரம்ப
   சன்மார்க்க நெறிமுறை காட்டி
5. காட்டி அருளும் அரங்கன் மார்க்கம்
   கண்டுரைப்பேன் தருமமாகப் பரவிவர
   வாட்டமறை இந்தியா தமிழகத்தின்
   வல்லமையான ஆளுமைகள் வணங்கி
6. வணங்கி ஏற்றுக் கடைபிடிக்க
   வடிவேலனார் பாதுகாப்பாக இறங்கி
   இணங்கி இந்தியா தமிழகத்தில்
   எல்லாம் தயவு தருமப்படி சேவையாக

7. ஆகவே மாறும்படிச் சூழல்
ஆற்றலாக மாற்றம் காணும்
வகையிலா சேர்த்த பொன்பொருள்
வருவாயை தருமவழி செலவிட்டு
8. செலவிட்டு மக்கள் சேவையாக
செப்பிடவே புண்ணிய பலம் பெருக்க
நலமுற அனைத்து துறைகளும்
ஞானிகள் ஆசி அனுகூலம்பட
9. அனுகூலம்பட சத்தியவழி செயலாக
அனைத்தும் மாறி வளர்ச்சிதனை
அனுகூலமாக அளவிலா கண்டு உயரும்
ஆற்றல் மிக்க ஞானவழிகளிருக்க
10. இருக்கவே பதுக்கல் சுருட்டல்
எதிலும் கயமை புரிகின்ற
வருத்தமான செயல்முறைகளை மாற்றி
வள்ளல் நெறிக்கு வந்தால் தேசம் முதன்மைபெறும்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சோபகிருது வருடம் தை மாதம் 28ம் நாள் 11.02.2024 ஞாயிற்றுக்கிழமை முதல் மாசி மாதம் 06ம் நாள் 18.02.2024 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகள் :

எல்லையில்லா தவம் செய்திட்ட மகா தவசியே ஆறுமுக அரங்க மகா தேசிகனே வாழ்க வாழ்க மரணமில்லாப் பெருவாழ்வினை தாம் பெற்றதோடு உலக மக்கள் எல்லாம் அடைந்திடவே புண்ணிய வழியாகிய தர்மநெறியினை உபதேசித்து வழிகாட்டி வழிநடத்தும் ஞானகுருவே ஆறுமுக அரங்க மகா தேசிகனே! உலகை காக்கவே அவதரித்திட்ட அவதார ஞானியே உமது

அவதாரத்தை போற்றியே அரங்கா இவ்வுலகத்தின் எதிர்காலம் குறித்து அகத்திய மகரிஷி எம்மிடம் கேட்க அகத்திய மகரிஷி யானும் சோபகிருது வருடம் தை மாதம் **28**ம் நாள் **11.02.2024** ஞாயிற்றுக்கிழமை முதல் மாசி மாதம் **06**ம் நாள் **18.02.2024** ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகளை வார ஆசி நூலாக உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

பண்புமிக்க ஞானவான்கள் படைகள் தயக்கம் இன்றி வல்லமையுடன் உலகமெலாம் நிரம்பி பரவும் வகையில் அற்புத ஞானநெறியாம் சன்மார்க்க நெறியினை உலகோர்க்கு உபதேசித்து வழிகாட்டி அருள் செய்து காக்கின்ற ஆறுமுக அரங்க மகா தேசிகனாரின் சன்மார்க்க நெறி வழி உலகமெலாம் தர்மமாக பரவி வருகின்றதப்பா.

ஆதலினாலே ஆட்சி பொறுப்பில் உள்ளோர் வல்லமை மிக்க சன்மார்க்க நெறியினை ஏற்று தர்மங்களை செய்து சன்மார்க்க நெறி நின்று வரவர சன்மார்க்க ஞானத்தலைவன் முருகப்பெருமானும் அவர்களுக்கும் நாட்டிற்கும் பாதுகாப்பாய் தேசத்தினில் வெளிப்பட்டு நாடெங்கும் தயவு பெருகும்படி செய்து தருமம் பெருகச் செய்து தரும உலகமாக தேசம் மாறுகின்ற சூழலை உண்டாக்குவார் வல்லமை மிக்க தேசமாக மாற்றுவார்.

முறையற்ற வழியில் சேர்த்திட்ட பொருளை, பொன்னை, வருவாயை மனம் மாறி தருமங்களை செய்து மக்களுக்கு சேவை செய்திட செலவு செய்தும் அவரவரின் புண்ணிய பலத்தினை பெருக்கி வரவர தேசத்தின் எல்லா துறைகளும் ஞானிகளின் ஆசிகளை பெற்று உண்மையான செயல்பாடுகளை எல்லா துறைகளும் கண்டு மேன்மேலும் வளர்ச்சி அடையுமப்பா.

அற்புதமான தர்மத்தின் ஞானவழி இருக்கின்ற போது ஏன் பதுக்கல் சுருட்டல் ஊழல் புரிகின்ற தவறான வழிகளில் செல்கிறீர்கள் மாறியே வள்ளல் நெறியாம் தர்மத்தின் நெறியாம் சன்மார்க்க நெறிக்கு தேசம் வருமாயின் நமது தேசமே உலகினில் முதன்மையான இடத்தினை பெறுமப்பா எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–